

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு மத்திய ஒன்றியம், சி.கோபாலபுரம் கிராமம், சி.அர்த்தநாரிபாளையம், சி.கருமண்டகவுண்டனூர், சிமெண்ட கான்கிரீட் சாலை அமைக்கும் பணி சி. கோபாலபுரம் முதல் சி. கரு மண்ட கவுண்டனூர் வழியாக தார்ச்சாலை ராசக்கா பாளையத்தில் ஊராட்சி மன்ற கட்டடம், சுகாதார நிலைய கட்டடம், வெள்ளாளப் பாலையத்தில், துணை சுகாதார நிலைய கட்டடம், குறும்ப பாளைய கிராமத்தில் நீர்த்தேக்கத் தொட்டி, போத்தனூர் கிராமத்தில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் வீணஸ் நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, குறும்ப பாளையத்தில் மூன்று வகுப்பறைகள், கிணத்துக்கடவு வடக்கு ஒன்றியம், காட்டம்பட்டியில் சந்தைக் கொட்டகை ஆகியவற்றை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். உடன் கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி, தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வர சாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் நேற்று முன்தினம் (12.12.2024) சென்னை, இராயப்பேட்டை, பி.வி.ஆர் சத்யம் திரையரங்கில் தமிழ்நாடு அரசின் ஆதரவுடன், இந்தோ சினி அப்ரிசியேசன் ஃபவுன்டேசன் சார்பில் நடைபெறும் 22வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவினை (22ND CHENNAI INTERNATIONAL FILM FESTIVAL) குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இந்திய திரைப்பட திறனாய்வுக் கழகத்தின் தலைவர் சிவன் கண்ணன், இந்திய திரைப்பட திறனாய்வுக் கழகத்தின் பொதுச் செயலாளரும், சென்னை சர்வதேச திரைப்பட விழா இயக்குநருமான ஏ.வி.எம்.சண்முகம். துணைத் தலைவர் ஆனந்த் ரங்கசாமி, திரைப்பட நடிகைகள் திருமதி பூர்ணிமா, திருமதி குஷ்பு மற்றும் திரைப்படத் துறை கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

### மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகள்

# தமிழ்நாடு அரசால் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்!

## அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

சென்னை, டிச.14-

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு நேற்று முன்தினம் (12.12.2024) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், மாஞ்சோலை தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு தெற்கு பாப்பான்குளம் பகுதியில் தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வீட்டிற்கான சாவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, மாஞ்சோலையில் உள்ள தொடக்கப் பள்ளியில் மாஞ்சோலை தேயிலை தோட்ட பணியாளர்களுடன் அமைச்சர் கே.என். நேரு தலைமையில், கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. '

இக்கூட்டத்தில் அப்பகுதி மக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல் வஹாப், முன்னாள் சட்டமன்ற பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

பின்னர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:

மாஞ்சோலை எஸ்டேட் பகுதியில் வாழும் மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் நீதிமன்ற உத்தரவுக்கு உட்பட்டு செய்து கொடுக்கப்படும், இந்த மக்களின் வாழ்வாதரங்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு முதலமைச்சரை சந்திக்கவும் ஏற்பாடு செய்யப்படும். தமிழ்நாடு அரசு மாஞ்சோலை பகுதி மக்களுக்கான 11 வகையான சிறப்பு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது,

மாஞ்சோலை பகுதி மக்களுக்கு கலைஞர் வீடு கட்டும் திட்டத்தில் வீடு கட்டி கொடுக்கப்படும், இங்கு வசித்த 4 தொழிலாளர்களுக்கு அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்றைய தினம் தெற்கு



பாம்பான்குளத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் அடுக்குமாடி குடியிருப்பில் குடியிருப்பிற்கான வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. சிலருக்கு ரெட்டியார்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வீடு கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதி மக்களுக்கு முழு மானியத்துடன் வீடுகள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், மாஞ்சோலை பகுதியில் வாழும் மக்கள் சமத்துவமாக வாழ்வதற்கு சமத்துவபுரம் போல் ஒரே இடத்தில் வசிக்கவும் விருப்பம் தெரிவித்துள்ளனர், அதுபோன்று வேண்டும் என்று அனைவரும் விரும்பினால் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று நடைமுறைகளுக்கு உட்பட்டு வீடுகள் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை இங்கு பலருக்கு கிடைத்துள்ளது. இன்னும் கிடைக்காதவர்களும் உள்ளனர். அவர்களுக்கு உரிமைத்தொகை கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாஞ்சோலை மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய உத்தரவிட்டுள்ளார். மேலும், நீதிமன்றத்தின் உத்தரவுக்கு உட்பட்டு அனைத்து தேவையான எல்லா வசதிகளும் நிறைவேற்றப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் துணை இயக்குநர் இளையராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.சுகன்யா, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் (பொ) செல்வி.அம்பிகா ஜெயின், வட்டாட்சியர் காஜா கரிபூன்நவாஸ் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### கடந்த ஆண்டைக் காட்டிலும் நடப்பாண்டில்

# பதிவுத்துறை வருவாய் ரூ.1,891 கோடி அதிகரிப்பு!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் பி.மூர்த்தி - அலுவலர்களுக்குப் பாராட்டு!

சென்னை, டிச. 14-

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமையில் நேற்று முன்தினம் (12.12.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத் துறை அலுவலகக் கூட்டரங்கில் 2024-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத் துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்/ தனித்துணை ஆட்சியர் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

பதிவுத்துறையில் கடந்த 2023-2024 நிதி ஆண்டின் டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி (11.12.2023) வரை வருவாய் ரூ.12634 கோடியும் நிகழும் 2024-2025 நிதி ஆண்டின் டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி (11.12.2024) வரை ரூ.14525 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த நிதி ஆண்டின் வருவாயுடன் ஒப்பிடுகையில் இந்த நிதி ஆண்டில் நேற்று வரையில் ரூ.1891 கோடி வருவாய் கூடுதலாக ஈட்டப்பட்டுள்ளது.

**அலுவலர்களுக்குப் பாராட்டு!**

கூட்டத்தில் பேசிய அமைச்சர் பி.மூர்த்தி, அரசுக்கு அதிக வருவாய் ஈட்டித்தந்த பதிவுத்துறை அலுவலர்களுக்கு பாராட்டு தெரிவித்து, இந்த நிதி ஆண்டின் மீதமுள்ள மாதங்களிலும் வருவாய் இலக்கினை எய்திட பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள அறிவுறுத்தினார்.



மேலும் பெரும்பாலான சார் பதிவாளர் அலுவலகங்களில் பதிவு செய்த ஆவணங்களை அதே நாளிலே திருப்பி ஒப்படைத்தல் சதவீதம் கூடியிருப்பதை சுட்டிக்காட்டி பாராட்டு தெரிவித்து, அனைத்து சார் பதிவாளர்களும் மேற்கண்ட பணியினை சிறப்பாக செய்வதை மாவட்ட பதிவாளர்கள் மற்றும் துணை பதிவுத்துறை தலைவர்கள் உறுதி செய்யுமாறு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பல்கலைக் கழகங்களின்

# ஆட்சி மன்றப் பேரவை உறுப்பினர்களாக - சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வு!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவிப்பு!

**சென்னை, டிச. 14 -**

**சட்டப் பேரவையில், 10.12.2024 அன்று, பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களாக, சட்டப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விவரத்தை அறிவித்தார்.**

பேரவைத் தலைவர் அவர்கள், இதுகுறித்து வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:-

பல்கலைக்கழகங்களின் ஆட்சி மன்றப் பேரவை, ஆட்சிக் குழு, மேலாண்மைக் குழுமம் மற்றும் கல்விக் குழு ஆகியவற்றில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்புத் தாள்கள் வரப்பெற்றன.

அழகப்பா பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை - டாக்டர் வை. முத்துராஜா,

பாரதியார் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை -ஈ.ஆர்.ஈஸ்வரன், ஆர். கணேஷ்,

பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை ரா. இளங்கோ, ப.அப்துல் சமது,

மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை - ஆ. வெங்கடேசன், மு. பூமிநாதன், செ. ஊர்வசி அமிர்தராஜ், வி.வி. ராஜன் செல்லப்பா,



மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை - டாக்டர் தி. சதன் திருமலைக் குமார், ரூபி ஆர். மனோகரன்,

பெரியார் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை - பெ. ராமலிங்கம், ட்டி. இராமச்சந்திரன்,

தமிழ்நாடு டாக்டர் எம். ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை - டாக்டர் நா. எழிலன், வி.ஜி. இராஜேந்திரன்,

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை - டி.கே.ஜி. நீலமேகம், ம. பிரபாகரன்,

சென்னைப் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை அ. வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், க. கணபதி, ஐட்ரீம் இரா. மூர்த்தி, கோ. செந்தில் குமார், திருமதி கு. மரகதம் குமரவேல்,

அண்ணா பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு - இ. பரந்தாமன், அண்ணா பல்கலைக் கழகம் ஆட்சிக் குழும. சிந்தனைச் செல்வன்,

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியல் பல்கலைக்கழக ஆட்சிக் குழு - சி.வி.எம்.பி. எழிலரசன்,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் - தி. வேல்முருகன்,

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் - வி.பி. நாகைமாலி,

தமிழ்நாடு கால்நடை மருத்துவம் அறிவியல் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் - டாக்டர் இரா. இலட்சுமணன்,

திருவள்ளூர் பல்கலைக்கழகம் கல்விக் குழு ஏ.பி. நந்தகுமார், ஏ.நல்லதம்பி தேர்ந்தெடுக்கப் பெறவேண்டிய உறுப்பி னர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்புத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட் புத் தாள்கள் அளித்த உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

மேற்குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுக்காலங்களாக இருப்பினும், அவர்கள் 16-வது ஆட்சி மன்றப் பேரவை சட்டமன்றப் பேரவை காலம் முடியும்வரை அப்பதவிகளில் ட்பணியாற்றுவர். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவி இழக்க நேரிட்டால் அந்நாளோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்துவரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் அறிவித்தார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூரில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு அரூர் பேரூர் கழகச் செயலாளர் முல்லை ரவி ஏற்பாட்டில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் தலைமையில் அரூர் 4 ரோடு ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியில் உள்ள மாணவ – மாணவியர்களுக்கு எழுதுப் பொருள், பேட் மற்றும் 150 பெண்களுக்குப் புடவைகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் அரூர் தொகுதிப் பார்வையாளர் செல்வராஜ் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 7, 8 – இல் எட்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி கீழ்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 14.12.2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | 7 | திருமயம் | ஏ.கே.பி.மஹால், மதுரை சாலை, திருமயம். |
| | மாலை 4.00 மணி | | மயிலாடுதுறை | விஜய் மஹால், தரங்கம்பாடி சாலை, மயிலாடுதுறை. |
| 15.12.2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | | பூம்புகார் | அண்ணா திருமண மண்டபம், செம்பனார்கோயில். |
| | மாலை 4.00 மணி | | புதுக்கோட்டை | எம்.ஏ.கிராண்ட் ஹோட்டல், ஜனப்ரியா சூப்பர் மார்க்கெட் அருகில், புதுக்கோட்டை. |
| | காலை 9.00 மணி | 8 | அருப்புக்கோட்டை | வேல்ராஜன் திருமண மண்டபம், அருப்புக்கோட்டை. |
| | மாலை 4.00 மணி | | சாத்தூர் | எஸ்.கே. பாரடைஸ் மஹால், சாத்தூர். |
| 17.12.2024 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | | சிவகாசி | நாச்சியார் மஹால், சசி நகர், சித்துராஜபுரம், சிவகாசி. |
| | மாலை 4.00 மணி | | விருதுநகர் | வி.வி.வி.அரங்கம், அம்பாள் மண்டபம் பின்புறம், அருப்புக்கோட்டை சாலை, விருதுநகர். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 12-12-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி